மெல்பன் - ரொக்பேங்

# குன்றத்து குமரன் ஆலயம்

# தோற்றமும் வளர்ச்சியும்




ராஜரட்ணம் வைத்தியநாதனின் அர்ப்பணிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நூல்:** மெல்பன் - ரொக்பேங் குன்றத்து குமரன் ஆலயம்
தோற்றமும் வளர்ச்சியும்

**மொழி:** தமிழ்

**பதிப்பு:** தை 2021

**பக்கங்கள்:** 28

**தொகுப்பு:** மா.வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவமயம

**மெல்பன் - ரொக்பேங்**

# குன்றத்து குமரன் ஆலயம்

# தோற்றமும் வளர்ச்சியும்

**அன்பர் இராஜரட்ணம் வைத்தியநாதனின் அர்ப்பணிப்பும் !**

**"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்"**
இது முது தமிழ் பாட்டி ஔவையாரின் வாக்கு.

நாம் புலம்பெயர்ந்து வாழும் கங்காரு தேசமான இந்த அவுஸ்திரேலியாவில், விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் மாநகரத்திற்கு வடமேற்குப்பிரதேசங்களில் வாழும் இந்து சமயப்பெருங்குடி மக்களுக்காக ஒரு பொதுக்கோயில், அதுவும் முருகன் கோயிலாக நிர்மாணிக்கவேண்டும் என்ற எண்ணம் இந்தப்பிரதேசத்தில் நீண்டகாலமாக வசிக்கும் அன்பர் **இராஜரட்ணம் வைத்தியநாதன் (ரஞ்சன்)** அவர்களுக்கும், மற்றும் சிலருக்கும் உதித்த சிந்தனையின் பெறுபேறாகவே உருவானதுதான் நாமனைவரும் தற்போது வணங்கி வரும் **ரொக்பேங் குன்றத்து குமரன்** ஆலயமாகும்.

இதன் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் பற்றி எதிர்கால சந்ததியினரும் அறியும் வகையில் எழுதிவைப்பதற்கு மனதில் எழுந்த எண்ணத்தின் வடிவமே இந்நூலாகும்.

இதனை குன்றத்துக்குமரன் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

குறிப்பிட்ட ரொக்பேங் பிரதேசத்தில், 32 ஏக்கர் பரப்பளவில் ஒரு காணி விற்பனைக்கு வருவதாக உள்ளூர் பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகியிருப்பதை அறிந்த நபர் ஒருவர் அதுபற்றி வைத்தியநாதனுக்கு தெரிவித்ததையடுத்து, வைத்தியநாதனும் மற்றும் அன்பர் ஒருவரும் அந்தக்காணியை விற்பனை செய்வதற்கு முன்வந்துள்ள ரியல் எஸ்டேட் முகவரைச் சந்திக்கச் சென்றனர். அங்கு வேறு சிலரும் அந்தக்குறிப்பிட்ட காணியை வாங்குவதற்கு காண்பித்த ஆர்வத்தை கவனித்த வைத்தியநாதன் தாமதமின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காணியின் விலைப்பெறுமதியில் முற்பணமாக பத்துவீதத்திற்குரிய பணத்தை, தனது சொந்தப்பணத்தில் செலுத்தி முன்பதிவுசெய்துகொண்டார்.

அமையவிருக்கும் ஆலயம் பொதுவானதாக இருக்கவேண்டும், தனிப்பட்ட ஒருவருடையதாக இருக்கலாகாது என்ற நல்ல நோக்கத்தில், மேலும் பலரை நாடியதுடன், அந்தக்காணியை வாங்குவதற்கான மீதிப்பணத்தினை சேகரிப்பதற்கும் வைத்தியநாதன் முயற்சிகளை மேற்கொண்டார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அன்பர்கள் சுமார் இருபது பேரளவில் முன்வந்து தங்கள் பங்களிப்பினையும் வழங்கி அந்தக்காணியை வாங்கினார்கள்.

ஆலயம் நிர்மாணிப்பதற்காகவே குறிப்பிட்ட காணி வாங்கப்பட்டிருப்பதனால், ஆலயத்திற்கு ஐந்து ஏக்கர் காணியை அன்பளிப்பாக வழங்கவேண்டும் என்ற வைத்தியநாதனின் வேண்டுகோளை, அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் அப்பொழுது ஏற்றுக்கொண்டனர்.

அக்காலப்பகுதில் இக்காணிகள் திருத்தப்படாதமையினால், அதன் உட்பிரிவுகளைச்செய்து, காணியை பிரித்துக்கொடுக்க முடியவில்லை. இதன் காரணமாகவே இந்தக்காணி ஆலயத்திற்காக முதலில் குத்தகை அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது.

எப்பொழுது அக்காணிகளின் துணைப்பிரிவு செய்யப்படுமோ, அச்சமயத்தில் அந்தக்காணியை ஆலயத்திற்கு அன்பளிப்பாக பெறலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்பின்னர், வாங்கிய காணியில் எவ்விடத்தில் ஆலயத்தை நிர்மாணிப்பது என்ற கேள்வி எழுந்ததும், காணி உரிமையாளர்கள், சற்றுத் தொலைவில் பற்றைகள் நிறைந்திருந்த இடத்தை காண்பித்தனர். அவர்கள் காண்பித்த பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பெரிய பெரிய பாராங் கற்களும் காட்டு மரங்களும் செடி கொடிகளும் முள்ளுப்பற்றைகளும் நிறைந்திருந்தன.

அக்காணிகளின் சில உரிமையாளர்கள் அங்கு கூடி பேசிக்கொண்டிருந்த இடத்தில் ஒரு கம் மரமும் செழித்து வளர்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வேரடியில் ஒரு சிறு கருங்கல்லும் காணப்பட்டது. அதை அவதானித்தவர்கள், அதனையே பிள்ளையாராக உருவகப்படுத்தி முதலில் பூசைகள் செய்து பின்னர் அதனை வழிபடத் தொடங்கினார்கள்.

வைத்தியநாதன் அவ்விடத்திற்கு அடிக்கடி வந்து, இந்த இடத்தை எப்படி துப்பரவு செய்து கோயிலைக்கட்டுவதென்று யோசனை செய்து வந்தார். அவ்விடத்திற்கு அவர் வரும் சமயங்களில் தனது காரைவிட்டு இறங்கி, அந்தப் பிள்ளையாரை வணங்கி வருவது வழக்கம். இந்த வழக்கம் கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாகத் தொடருகிறது.

ஆலயத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில், நரிகளின் நடமாட்டமும் பாம்புகள், விஷஜந்துக்கள், சிறிய பிராணிகளின் சஞ்சாரமும் காணப்பட்டது. எனினும் அதனால் மனம்தளராது எந்தத்தயக்கமும் இல்லாமல் வைத்தியநாதன் மண்ணை செப்பனிடும் ஒரு இயந்திரத்தை தனது சொந்தப்பணத்தில் வாங்கி, காணியின் ஒரு பகுதியை துப்பரவு செய்துகொண்டு வந்தார். அந்த இயந்திரத்திற்காக அவர் சுமார் 25 ஆயிரம் (**$25,000**) அவுஸ்திரேலியன் வெள்ளிகளை செலவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கத்தில் மக்கள் வந்து வழிபடுவதற்கு ஏற்றவாறு ஒரு பண்ணைக் கொட்டகையை அமைக்கலாம் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்குத் தேவையான பணத்தினை சேகரிப்பதற்காக மேலும் முப்பது அங்கத்தினர்களை இணைத்து தலா **500** வெள்ளிகள் (**$500**) வரையில் உதவியாகப்பெற்று அந்த கொட்டகையை அமைக்கும் பணியை வைத்தியநாதன் சிலரது உதவியுடன் செய்து முடித்தார்.



வழக்கம்போன்று தினமும் இந்த ஆலயக்காணிகளில் வேலை செய்யச் சென்ற வைத்தியநாதன், ஒரு நாள் அங்கே ஒரு அதிசயத்தை கண்டு திகைத்தார்.

இந்தப்பதிவில் முன்னர் குறிப்பிட்ட அந்த கம் மரத்தில் ஒரு பிளவு தோன்றி, அதிலிருந்து நான்கு யானைக்கால்களைப்போன்ற தோற்றம் வெளிப்பட்டிருந்ததை கண்டார்.

ஒரு சிலநாட்களின் பின்னர் அந்த அதியற்புதக்காட்சியை வைத்தியநாதன் மற்றவர்களையும் அழைத்து காண்பிக்கவும், அவர்களும் மெய்சிலிர்த்துப்போயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பொழுது, அக்காணிகளில் மின்சாரம், தண்ணீர், மற்றும் எரிவாயு வசதிகள் இருக்கவில்லை. அதனால், அமைக்கப்பட்ட கொட்டகையின் உள்ளே ஒரு பீடமும் அறையும் அமைக்க எண்ணி, ஒரு மின் உற்பத்தி இயந்திரத்தை (Generator) தனது சொந்தப்பணத்தில் வாங்கி வேலைகளைச் செய்யத் தொடங்கினார்.

அங்கு அவர் தனியாகத்தான் ஒவ்வொரு நாளும் சென்று வேலைகளைச்செய்வதுண்டு. இந்தக் காலக்கட்டத்தில் “இந்த இடத்தில் இவர் ஒரு கோயில் கட்டுவது அசாத்தியம்” என்று எண்ணி ஒருவரும் இந்த வேலைகளில் பங்கு பற்றவில்லை. ஒரு சிலர் தமது அவநம்பிக்கையை வைத்தியநாதனிடம் வாய்விட்டும் கேட்டிருக்கிறார்கள்.

எனினும், அதற்காக மனம்தளராத வைத்தியநாதன், தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் தன் பணியைத் தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் அவ்விடத்திற்கு வருகை தந்த ஒரு அங்கத்தவர் , கதிர்காம முருகனின் தேவஸ்தானத்தில் காணப்படும் திரைச்சேலையைப்போன்ற வடிவத்திலிருந்த ஒரு திரைச்சேலையை வைத்தியநாதனிடத்தில் ஆலயத்திற்காக வழங்கினார்.

அதனை அப்போது அவர் அமைத்துக்கொண்டிருந்த சுவாமி பீடத்தின் மீது உயரத்தில் கட்டித் தொங்கவிட்டார். பின்னர் அன்றுமுதல் அதனையும் வழிபட்டுவிட்டே ஆலயத்திருப்பணிகளை தொடருவது அவரது வழக்கமாகியது.

கதிர்காமத்தில் முருகன் சந்நிதியில் வணங்கப்படும் வேல் எத்தகைய தோற்றம் கொண்டது என்பது பற்றிய எண்ணமே அவரது மனதில் அடிக்கடி அலைமோதிக்கொண்டிருக்கும்.

வைத்தியநாதனின் இல்லத்தில் மரத்தினாலான ஒரு பிள்ளையார் சிலை இருந்தது. அதனை அவர் அவுஸ்திரேலியாவுக்கு **1985** ஆம் ஆண்டில் வந்தபோது, இலங்கையிலிருந்து கொண்டுவந்திருந்தார். சிலைகளை வீட்டில் வைத்து வணங்கலாகாது என்று கேள்விப்பட்டதனால், அச்சிலையை அவர் வீட்டில் எவரும் பார்க்காதவாறு மறைவாக வைத்திருந்தார். ரொக்பேங்கில் ஆலையம் அமைக்கும் பணியை அவர் முன்னெடுத்ததும், தமது இல்லத்திலிருந்த அந்த பிள்ளையார் சிலையை எடுத்துவந்து, அங்கே அதுவரையில் வழிப்பிள்ளையாராக வழிப்பட்ட கருங்கல் மீது வைத்து, அன்றிலிருந்து அதையும் வழிபட்டு பிரதி வெள்ளிதோறும் பூசைகள் செய்துவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தனது சொந்தப் பணத்திலேயே பண்ணை கொட்டகையின் உள்ளே மேற்கொள்ள வேண்டிய பணிகளை நிறைவு செய்துவிட்டு, அவ்விடத்தில் பூசை மற்றும் கூட்டுப்பிரார்த்தனைகள் நடத்தவேண்டும் என்ற எண்ணத்தில், சுமார் 1000 மீற்றர் தொலைவிலிருந்து நிலத்தை கிண்டி, ஒரு அங்கத்தவரின் உதவியுடன் தண்ணீர் குழாய் இணைப்பினை செய்துமுடித்தார். பின்னர் தற்காலிக கழிப்பறை வசதியையும் செய்து முடித்தார்.

அதற்கெல்லாம் அவரிடம் இயல்பாகவே இருந்த தொழில்நுட்ப அறிவு துணை நின்றது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சமயத்தில், இந்தக்காணியில் கட்டிடங்கள் எதுவும் அமையக்கூடாது என்ற அறிவுறுத்தல் கடிதம் எதிர்பாராதவகையில் கவுன்ஸிலிலிருந்து இவர்களுக்கு வந்து சேர்ந்தது.

இதனால் மிகவும் மனமுடைந்த வைத்தியநாதன், இலங்கை கதிர்காமத்திற்கும் மலேசியா பத்துமலை முருகன் தேவஸ்தானத்திற்கும் சென்றுவர தீர்மானித்து தனது குடும்பத்தினருடன் பயணத்தை மேற்கொண்டார்.

அவ்வாறு பயணித்தபோது கதிர்காமத்தில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

அவர் குடும்பத்துடன் பூஜை செய்வதற்காக, பூஜைத்தட்டுடன் கோயிலுக்கு வெளியில் வரிசையில் காத்திருந்தார். அப்போது கோயிலின் உள்ளே இருந்து வெள்ளை ஆடை அணிந்த ஒருவர் வைத்தியநாதனிடம் வந்து, அவரது கையைப்பிடித்து அவரை மட்டும் அழைத்துக்கொண்டு கோவிலின் உள்ளே சென்றார். பின் அவர் கையிலிருந்த பூஜைத் தட்டத்தை வாங்கிக்கொண்டு மூலஸ்தானத்தை மூடியிருந்த திரைச்சேலையை விலக்கியவாறு உள்ளே சென்றார்.

அதுபோன்றதோர் திரைச்சேலைதான் மெல்பன் ரொக்பேங்கில் நிர்மாணிக்கத் தொடங்கிய ஆலயத்தின் கொட்டகையில் வணக்கத்திற்குரியதாக கட்டப்பட்டிருந்தது.

கதிர்காம வேலவன் சந்நிதியின் திரைச்சேலைக்குப்பின்னாலிருக்கும் வேலைப் பற்றிய எண்ணத்தையே எப்போதும் சுமந்துகொண்டிருப்பவர்தான் வைத்தியநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்திலும் அந்த எண்ணமே அவருக்குத் தொடர்ந்து வந்தது. உள்ளே வைத்தியநாதன் வழங்கிய பூசைத்தட்டத்தை வைத்து பூசை செய்த அந்த பூசகர், வெளியே வந்து, **“நீ திரும்பிப்போ, உனது எண்ணமெல்லாம் நிறைவேறும்”** என்று சிங்கள மொழியில் ஆசிர்வதித்து அனுப்பிவைத்தார். இத்தனைக்கும் வைத்தியநாதன் அந்தபூசகரிடத்தில் தனது மனதிலிருந்த வேண்டுதல் எதனையும் சொல்லவில்லை என்பதே குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர், அங்கிருந்து புறப்பட்டு மலேசியா சென்றார். அங்கே பிரசித்திபெற்ற பத்துமலை முருகன் சந்நிதான தரிசனத்திற்கு சென்றபோது, அங்கும் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

அங்கிருந்த ஆலயக்குருக்கள், வைத்தியநாதனிடம் அவரது பெயரையும் எந்த நாட்டிலிருந்து வருகிறாய்..? எனவும் கேட்டார். இவரும் தனது பெயரையும் தான் இலங்கை கதிர்காமத்திலிருந்து வரும் தகவலை கூறியதும், அந்தக் குருக்கள், **“உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். வரவேண்டிய இடத்திற்கு வந்திருக்கிறாய்”** என்று சொல்லி இன்முகத்துடன் வரவேற்றார். அதைக்கேட்டதும் வியப்படைந்த வைத்தியநாதன், அவுஸ்திரேலியா மெல்பன் ரொக்பேங்கில் தான் முன்னின்று அமைத்துவரும் ஆலயத்தின் காணி மற்றும் அங்கிருக்கும் கம் மரத்தில் அதிசயமாகத் தோன்றியிருக்கும் யானைக்கால் தோற்றங்களை காண்பிக்கும் ஒளிப்படங்களை அவருக்கு காண்பித்தார்.

அதனைப்பார்த்து அதிசயித்து மெய்சிலிர்த்த அந்த குருக்கள், “இந்த பத்துமலையிலும் இதே போன்றதோர் அற்புத காட்சி பல வருடங்களுக்கு முன்னர் தோன்றியதையடுத்தே, இந்த முருகன் சந்நிதியும் உருவானது” என்ற செய்தியை கூறினார்.

மற்றும் ஒரு குருக்கள், அந்த சந்நிதானத்தின் கருவறையிலிருந்து வெளிப்பட்டு, ஒரு வேலும் பட்டுத்துணியும் முருகனுக்கு அணிவித்த பூமாலையும் விபூதியும் கொடுத்து, **“நீ போ... உனது எண்ணமெல்லாம் சரிவரும்”** என்று ஆசீர்வதித்து விடைகொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் கதிர்காமத்தில் அந்த சிங்கள பூசாரி சொன்னவாறே இங்கு மலேசியா பத்துமலையிலும் ஒரு குருக்கள் சொன்னதைக்கேட்டு, வைத்தியநாதன் மெய்சிலிர்த்துப்போனார்.

குறிப்பிட்ட வேல், பட்டுத்துணி, மற்றும் பூமாலை விபூதியை ஒரு புதிய பெட்டகத்தில் வைத்து எடுத்துக்கொண்டு விமானம் மூலம் மெல்பன் வந்திறங்கிய வைத்தியநாதன், அந்தப்பொதி குறித்து , விமான நிலைய நிர்வாகத்தினால் வழங்கப்படும் பத்திரத்தில் பதிவு செய்யவில்லை.

அங்கும் ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

வைத்தியநாதனும் மகளும் சார்பற்ற (Random) பரிசோதனைக்காக செல்லவேண்டி வந்தது. சுங்கத்திணைக்களத்தினரின் ஸ்கேனர் இயந்திரத்துக்குள் அவர்களின் உடைமைகளை அனுப்பியபோது, மகளுடைய பொதியிலிருந்து ஒலி எழுந்தது. அதற்குக்காரணம் அதற்குள்ளிருந்த ஒரு பூவும் கொஞ்சம் விபூதியும்தான். அதனால் வைத்தியநாதனின் மனைவி பயந்தார். இந்த சின்னஞ்சிறிய பூவுக்கும் சிறிதளவு விபூதிக்குமே அந்த ஸ்கேனர் இயந்திரம் ஒலி எழுப்புகிறதே, இவரது பொதியில் அந்த வேலும் பூமாலையும் விபூதியும் வைத்திருக்கிறார் என்ன நடக்குமோ என்ற பயம்தான் அது.

ஆனால், வைத்தியநாதனின் பொதிகள் அந்தக்கருவியின் ஊடாக சென்றபோது எந்தவொரு ஒலியும் எழும்பவில்லை என்பது பேரதிசயமே!

அங்கிருந்த அதிகாரிகளுக்கு எந்தவொரு சந்தேகமும் வரவில்லை. அதனால் சந்நிதானத்தில் கிடைத்தவை அனைத்தும் எதுவித சிக்கல்களும் இன்றி வீடு வந்து சேர்ந்தது. அவர் அவற்றை தமது வீட்டின் சுவாமி அறையில் வைத்து அந்த “வேல்’’ ஐ தினமும் பிரார்த்தனை செய்துவந்தார்.

இரண்டு வார காலத்தில், எதிர்பாரதவகையில், அந்தக்காணியில் ஆலயம் மற்றும் கட்டிடம் அமைக்கலாம் என்ற அனுமதிக்கடிதம் வந்து சேர்ந்தது. அந்தக்கடிதம் வந்ததும் முருகன் நிகழ்த்திய அற்புதம்தான் என்று கருதினார். பின் நிருவாகத்தினரோடு கலந்துபேசி, **2003** ஆம் ஆண்டில் **கார்த்திகைத் தீபத்திருநாளின்போது,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானின் அந்த வேல் உருவத்தை குடும்பத்தினருடன் எடுத்துச்சென்று, ஆலயத்தின் கொட்டகையில் வைத்து வணங்கி பிரதிஷ்டை செய்வித்தார்.



அதே தினத்தன்று ஆலயத்திற்கென ஒரு அங்கத்தவர் வழங்கிய பிள்ளையார் சிலைக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அந்தப்பணிகள் பூர்த்தியானதன் பின்னர், பிரதி வெள்ளிக்கிழமையும் அங்கே பூசையும் கூட்டுப்பிரார்த்தனைகளும் கிரமமாக நடைபெறத்தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பிறகு சுமார் **500** மீற்றர் தொலைவிலிருந்து நிலத்தை கிண்டி மின்சார இணைப்புக்கும் வழிவகை செய்தார்.

அன்றிலிருந்து மின்சார உற்பத்தி இயந்திரத்தின் (Generator) தேவையும் படிப்படியாக குறைந்தது.

வெள்ளிக்கிழமை தோறும் அங்கே பூசைகளை மேற்கொண்டு வந்த ஆலயத்திருப்பணி அமைப்பில் இணைந்திருந்த அய்யர் ஒருவர் வெளியில் ஒரு நிரந்தர தொழிலில் ஈடுபட்டு வந்தமையால், ஆலயத்திற்கென நிரந்தரமாக ஒரு அய்யரை நியமிக்கவேண்டிய தேவை உருவானது. இதுகுறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. அவ்வாறு அய்யர் நியமனமாகும் பட்சத்தில் அவர் தங்குவதற்கு ஏற்ற வசதிகளுடன் ஒரு வீட்டினை

அந்தக்காணியில் தானே அமைத்து தருவதற்கு வைத்தியநாதன் முன்வந்தார். அவர் தான் நன்கொடையாக கொடுக்கவிருந்த சுமார் நூறு ஆயிரம் வெள்ளிகளில் ($100,000) அவரே மூன்று படுக்கை அறைகள் கொண்ட வீடு ஒன்றை நிர்மாணிக்கத் தொடங்கினார். அவரது இந்த தீர்க்கதரிசனமான பணிக்கு பிரதி சனிக்கிழமை தோறும் ஒரு சில அங்கத்தினர் அங்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கினர். ஆறுமாத காலத்தில் அந்த வீடும் பூர்த்தியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பூசகருக்காக அமையப்பெற்ற வீட்டின் வேலைகள் பூர்த்தியானதும், அதற்கான செலவுகளுக்கு அப்பால் எஞ்சியிருந்த **அவரது நன்கொடைப் பணத்தைக்கொண்டு, ஆலயத்தின் அத்திவாரத்தை வைத்தியநாதன்** அமைத்தார்.



இனி ஆலயத்தை நிர்மாணித்து நிறைவுசெய்வதற்கான நிதியை சேகரிக்கும் பணிகளைபற்றி அங்கத்தினர்கள் கூடி ஆராய்ந்தனர். ஏற்கனவே வாங்கப்பட்ட காணியும் குத்தகையில் இருப்பதனால், வங்கியிலிருந்து பணம் எடுக்கமுடியாமலிருந்தது. உடனே வைத்தியநாதன் தாமதமின்றி, தனது வீட்டின் உறுதிப்பத்திரத்தை வங்கியில் ஈடுவைத்து இருநூறாயிரம் வெள்ளிகளை ($200,000) கடனாகப்பெற்று ஆலயம் அமைப்பதற்காக கடன் தொகையாகவே வழங்கினார்.

**அவ்வேளையில் வங்கி என்ன வட்டி வீதம் பெற்றதோ அதனையே பெற்றுக்கொள்வதாகவும் சொன்னார்.**

அத்துடன் அடியார்கள் சிலரும் அங்கத்தினர் சிலரும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யவிருக்கும் விக்கிரகங்களுக்காக ஆதரவுக்கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Sponsorship) நீட்டினர். வேறும் சிலர் பணமாக நன்கொடை வழங்கினர்.

வைத்தியநாதன் அவுஸ்திரேலியாவில் பயிற்சி பெற்ற கட்டிடத் தொழிலாளர்களுடன் கூட்டு முயற்சியாக உழைத்து, ஆலயத்தின் சுவர்கள், யன்னல்கள், கதவு நிலைகள், மற்றும் கூரைகளையும் அமைத்து முடித்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சந்தர்ப்பத்தில், மலேசியாவிலிருந்து மூன்று ஸ்தபதிகளை ஆலயத்தில் சிற்பவேலைகள் செய்வதற்காக தருவிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

ஆனால், ஒரேயொரு ஸ்தபதி வருவதற்குத்தான் வாய்ப்புக்கிட்டியது. அவர், ஐந்தாறு சிற்பிகளுடன் இணைந்து மலேசியாவில் பல கோயில்களில் சிற்பவேலைகள் செய்த அனுபவம் மிக்கவர்.

அதனால், இங்கே வந்து தன்னந்தனியனாக ரொக்பேங் ஆலயத்தில் எவ்வாறு வேலைகளை செய்து முடிப்பது என்ற பயமும் தயக்கமும் அவருக்கு வந்தது. எனினும் வைத்தியநாதன் அவருடைய அச்சத்தையும் தயக்கத்தையும் போக்கி தைரியமாக செயல்படுங்கள் எனச்சொல்லி தார்மீக ஆதரவை (Moral Support) அவருக்கு வழங்கினார். அத்துடன் அவருடன் இணைந்து, மூலஸ்தானம், பீடங்கள் மற்றும் மண்டபங்களையும் கட்டி முடித்தார்.

மூலஸ்தான கோபுரம், உச்சியில் ஸ்தூபி (குடுமி) கட்டுமான வேலைகளில் வைத்தியநாதனுடன் சில அங்கத்தினரும் பக்தர்களும் இணைந்து பணியாற்றியமையும் குறிப்பிடத்தகுந்தது. அதன்பின்னர் மலேசியாவிலிருந்து வருகைதந்த ஸ்தபதி சிற்ப வேலைகளை செய்யத் தொடங்கினார்.

இந்தக் காலகட்டத்திலேயே வைத்தியநாதன், ஆலயத்துக்கும் அங்கு வழிபடுவதற்கு வரும் பக்தர்களுக்கும் பிரசாதங்கள் தயாரிப்பதற்காக ஒரு மடப்பள்ளியும் அத்துடன் இணைந்து இரண்டு அறைகளையும் நிர்மாணித்து முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அடியார் இந்தியாவிலிருந்து ஒரு கற்பக விநாயகர் விக்கிரகத்தை தருவித்து, ஆலயத்திற்கு தனது உபயமாக கையளித்தார்.

அந்த கற்பக விநாயகர் விக்கிரகத்தை ஏற்கனவே இந்த பதிவில் சொல்லப்படும் கம் மரத்தடிக்கு முன்பாக ஸ்தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வைத்தியநாதன் ஒரு சிலருடன் சேர்ந்து அதற்கு அத்திவாரமும் பீடமும் அமைத்து நான்கு தூண்களையும் நிர்மாணித்து மேற்கூரையுடன் கட்டி முடித்தார்.



இந்த கட்டுமான பணிகளுடன், ஆலயத்திற்கென ஒரு விழா மண்டபத்தின் அவசியத் தேவையை உணர்ந்து, அதற்கான பணிகளையும் தாமதமின்றி தொடக்கினார்.

அதனையும் பூரணத்துவமாக அத்திவாரம், சுற்றிவர சுவர்களுடன், கூரை, யன்னல்கள், கதவுகள் அமைத்து நிறைவுசெய்தார். இந்த விழா மண்டபத்திலேயே ஒரு சிற்றுண்டிச்சாலையையும் அமைத்தல் வேண்டும் என்பதுதான் அவரது எண்ணக்கரு. அதற்கேற்பவே இந்த விழா மண்டபத்தையும் அவர் வடிவமைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்திற்கான சிற்பவேலைகள் நிறைவுறும் தருணம் வந்தபோது, அங்கத்தினர்கள் அனைவரும் இணைந்து, கும்பாபிஷேகம் நடத்துவதற்கு தீர்மானித்தார்கள். அதற்கான நாளும் குறிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்திற்குத் தேவைப்பட்ட சகல பொருட்களையும் வைத்தியநாதனும் குழுச்செயலாளரும் அவ்வேளையில் பணியாற்றிய குருக்களும் சேர்ந்து ஒரு பக்தரின் சகாயத்துடன், இந்தியாவிலிருந்து தருவித்தார்கள். வைத்தியநாதன் முன்னின்று கட்டி முடித்த விழா மண்டபத்திலேயே கும்பாபிஷேகத்திற்காக தருவிக்கப்பட்ட அனைத்துப்பொருட்களும் மடப்பள்ளியை ஒட்டிய அறைகளில் விக்கிரகங்களும் பாதுகாப்பாக வைத்தெடுக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆலய அங்கத்தினர் மற்றும் பக்தர்களின் பேராதரவுடன் **2012** ஆம் ஆண்டு மாசி மாதம் 12 ஆம் திகதி கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வைத்தியநாதன் மலேசியாவிலிருந்து கொண்டுவந்த வேல், முருகனின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வருடந்தோறும் **திருக்கார்த்திகை தீப** நன்நாளில் அந்த “வேல்” இற்கு பாலாபிஷேகம் இடம்பெற்று, உள்வீதி வெளிவீதி வருவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சில மாதங்களுக்குப்பின்பு, முன்னரே திட்டமிடப்பட்ட விழா மண்டபம் அதனுடன் இணைந்த சிற்றுண்டிச்சாலை முதலான மேலதிக கட்டிட வேலைகளை தொடக்கியபோது, சில அங்கத்தினரின் எதிர்ப்புகளையும் வைத்தியநாதன் எதிர்நோக்கவேண்டியவரானார்.

எனினும் தளராத நம்பிக்கையுடனும் வந்த எதிர்வினைகளை சமாளித்து திட்டமிட்டவாறு குறிப்பிட்ட கட்டிட வேலைகளை அவர் பூர்த்திசெய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விழா மண்டபம் பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டதும், இன்றுவரை இங்கு பல திருமணங்கள், சுபவைபவங்கள், கலைநிகழ்ச்சிகள் உட்பட பலரது உறவினர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



அத்துடன் இங்கு இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலையும் ஆலயத்தின் நிருவாகத்திற்கு வருமானத்தைப் பெற்றுத்தருகிறது.

இத்துடன் மாத்திரம் வைத்தியநாதன் தனது ஆலயத்திருப்பணிகளை மட்டுப்படுத்திக்கொள்ளாமல், வாரம்தோறும் மூன்று அல்லது நான்கு நாட்கள் அங்கு சென்று ஆலயத்தை சுற்றி துப்பரவு செய்தல், புல் புதர்களை வெட்டி அகற்றி தூய்மைப்படுத்தல், ஆலயவளவைச்சுற்றி வெண்மணல் பரப்புதல் முதலான பணிகளையும் செய்து வந்தார்.

கும்பாபிஷேகம் நடந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் ஆலயத் திருவிழாவுக்கென ஒரு தேரும் சப்பரமும் தேவைப்பட்டது. அதற்கான பணம் ஆலயத்தின் கையிருப்பில் போதியளவு இல்லாத காரணத்தினால், தன்னிடமிருந்த பழைய இரண்டு மோட்டார் வாகனங்களை பயன்படுத்தி, தனது தொழில் நுட்ப அறிவுடன் தேர், சப்பரம் ஆகியனவற்றினை தனது கற்பனைத்திறனால் உருவாக்கி, தனியாகவே செய்து முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தேர் ஐந்து வருடங்கள் திருவிழாக்களின்போது, சுவாமியுடன் பவனிவந்தது. அவர் செய்த சப்பரம் இன்றைய காலத்திலும் திருவிழாக்களின்போது சுவாமி வெளிவீதி வலம்வருவதற்காக பாவனையில் உள்ளது.

ஆலயத்திற்கு பிரவேசிக்கும் இடத்தில் எழுந்தருளியிருக்கும் கற்பகவிநாயகரை அங்கு வரும் பக்தர்கள் வழிபடுதற்கு சில சிரமங்களையும் எதிர்நோக்கினர். வேகமாக வீசும் காற்றும் குளிரும் மழையும் அத்துடன் உள்ளே வரும் மழைத்தூறலும் பக்தர்களுக்கு இடையூறாக இருப்பதை அவதானித்த வைத்தியநாதன், அந்த பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்காக துரிதமாக இயங்கினார்.

அங்கும் சுற்றுச்சுவர் யன்னல், கதவு உருவானது. அத்துடன் ஸ்தபதியின் மூலம் பிள்ளையாரின் பதினாறு அவதாரங்களை சித்திரிக்கும் சிற்பங்களையும் அந்தச்சுவர்களிலும் வெளிப்பீடத்திலும் பதிப்பித்தார்.



சில வருடங்களுக்குப்பின், ஆலயத்தின் செயற்குழு, ஒரு சித்திரத்தேரை இலங்கையிலிருந்து தருவிக்க ஏற்பாடு செய்தார்கள். ஆலயத்தின் புதிய வரவான அந்த சித்திரத்தேரின் பாதுகாப்பை உத்தேசித்து அதற்கென ஒரு தேர்முட்டியை அமைக்கும் பணியிலும் வைத்தியநாதன் ஈடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப வேலைகளில் அவருக்கு ஒரு சிலர் வந்து உதவிகள் செய்தார்கள். அதன்பின்னர் தனது அவுஸ்திரேலிய வெள்ளை இனத்து தொழிலாளரின் ஒத்துழைப்புடன், சித்திரத்தேர் வந்து இறங்குவதற்கு முன்பே, அந்த தேர்முட்டியையும் செய்து முடித்தார்.



அவர் ஆலயத்தின் சுற்றுப்புறத்தை துப்பரவுசெய்தமையால் அங்கு ஒதுக்கப்பட்ட கற் குவியல்கள் ஒரு புறத்தில் சிறிய குன்றுபோன்று தோன்றிவிட்டது. அதைப்பார்த்ததும் வெகுநாட்களாக மனதில் தேக்கிவைத்திருந்த ஆத்மலிங்க கட்டிடத்தை அவ்விடத்தில் கட்டுவதுதான் சிறந்தது என வைத்தியநாதனும் சில அங்கத்தினரும் நினைத்து, நிர்வாகத்துடன் கலந்துபேசி முடிவெடுத்தார்கள்.

“இவ்வுலகை விட்டு நீங்கிய உறவுகளின் நினைவாக மறைந்தவரின் சொந்த பந்தங்கள் ஒழுங்கு செய்யும் சிரார்த்த கிரியைகளை நடத்துவதற்கும் வழிபடுவதற்கும் அத்துடன் எம்பெருமான் சிவனுக்குரிய தினங்களில் வணங்குவதற்கும் குறிப்பிட்ட விசேட தினங்களில் மக்கள் தங்களது விருப்பத்திற்கு அமைய பால் ஊற்றி அபிஷேகம் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும் தெய்வ வடிவம்தான் **ஆத்மலிங்கம்**.”

ஒருநாள் வைத்தியநாதன் ஆலயத்தின் வெளிப்புறம் வேலை செய்துகொண்டிருந்தபோது, அங்கு வருகை தந்த ஒரு பக்தர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் அவுஸ்திரேலியாவுக்கு வரும்போதெல்லாம், இந்த ஆலயத்திற்கு தரிசனத்திற்கு வருவதுண்டு. அவ்வாறு வரும் சமயங்களில் எல்லாம், அன்றிலிருந்து இன்றுவரை நீங்கள் இந்த மழை, குளிர், காற்று என்று எதையும் பொருட்படுத்தாது, ஆலயத்தொண்டில் ஈடுபட்டுவருவதை அவதானித்து வருகின்றேன். என்னால் தங்களுக்கு எந்தவித சரீர உதவியும் செய்து தரமுடியவில்லை. நான் சிங்கப்பூரிலிருந்து வந்து திரும்புபவன். நான் உங்களுக்கு பத்தாயிரம் வெள்ளிகளை ($10,000) தருகின்றேன். நீங்கள் இந்த ஆலயத்தின் திருப்பணிகளுக்கு தேவைப்பட்ட செலவுகளுக்கு இந்த அன்பளிப்பினை பயன்படுத்தலாம்'' எனச்சொல்லி, குறிப்பிட்ட தொகையை வைத்தியநாதனிடம் கையளித்தார்.

வைத்தியநாதன் அவரை, உடனே ஆலயத்தின் அலுவலகத்திற்கு அழைத்துச்சென்று, குறிப்பிட்ட நன்கொடைக்குரிய பற்றுச்சீட்டையும் அவரிடம் கையளித்துவிட்டு, “நான் இந்தப்பணத்தை, ஆத்மலிங்க கட்டிடத்திற்கு பயன்படுத்துவேன்'' என்று கூறினார்.

ஆலயத்தின் நிர்வாகக்குழுவினர், வைத்தியநாதனிடம் ஒரு குறிப்பிட்ட தொகைக்குள் ஆத்மலிங்கத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிக்கச் சொன்னார்கள். ஆனால் அவர் கோயில் பணத்தை எடுக்காமலேயே சிங்கப்பூர் பக்தர் நன்கொடையாக கொடுத்த பணத்தை மட்டும் பிரயோகித்து சீமெந்து, தரைஓடுகள் என்பனவற்றை கொள்முதல் செய்து, அத்திவாரத்தை தானே அமைத்தார். பின் தன்னந்தனியாக மின்சார இணைப்பு தண்ணீர்க்குழாய் வசதி போன்றவற்றையும் செய்து முடித்தார். அத்துடன் ஸ்தபதிகளின் உதவியுடன் தூண்களைக்கட்டினார். ஸ்தபதிகள் அத்தூண்களில் சிற்பவடிவங்களை செதுக்கினார்கள். கடைசியாக வைத்தியநாதன் தரை ஓடுகளை பதித்து நிறைவுசெய்தார்.

ஒரு அங்கத்தவர் ஆத்மலிங்கத்தையும் நந்தியையும் உபயம் செய்தார். வைத்தியநாதன் அவற்றை இந்தியாவிலிருந்து எடுப்பிக்கும் ஒழுங்களைச்செய்து அதற்கான செலவுகளை அவரே ஏற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020** ஆண்டு சிவராத்திரி உற்சவகாலத்தில், குறிப்பிட்ட ஆத்மலிங்கமும் நந்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.





வைத்தியநாதன் கட்டிட வேலைகள், மோட்டார் வாகனங்கள் திருத்த வேலைகள் உட்பட பல தொழில் நுட்ப வேலைகளில் அனுபவம் மிக்கவர். இத்தனைக்கும் அப்பால், அவர் நளபாகம் நன்கு அறிந்த சிறந்த சமையல் கலைஞருமாவார்.

ஆலயத்தின் உற்சவ காலங்களிலும் மற்றும் அன்னதானங்களின் போதும் வைத்தியநாதன் சுறுசுறுப்புடன் இயங்கி சமையல் சார்ந்த பணிகளையும் முன்னின்று மேற்கொள்பவர். அத்துடன் சிற்றுண்டி உணவுச்சாலை திறந்திருக்கும் நாட்களில் அங்கு சமையல் செய்பவருடன் சேர்ந்து, சமைத்து உதவிகள் செய்வதும் மற்றும் கோயில் நிதிக்காக (300) முந்நூறுக்கும் மேற்பட்ட மக்களுக்கு திருமணங்கள் மற்றும் பலதரப்பட்ட வைபவங்களுக்கு **ஒரு சிலரது உதவியுடன்** விருந்து சமையல்களிலும் ஈடுபட்டு **தனது அயராத உழைப்பை காணிக்கையாக்கியவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலங்கைத் தமிழர் எத்தனையே வருடங்களாக இந்த குன்றத்து குமரன் ஆலயத்தை முன்னின்று உருவாக்கி, அதன் **அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்குமாக** தனது சொந்த ஜீவனத்தைக்கூட முழு மனதுடன் கவனம் செலுத்தாது, பகல் இரவு பாராமல், மற்றும் காற்று, மழை , வெய்யில், குளிர் எதனையும் பொருட்படுத்தாது போதுமான ஊண், உறக்கம் குறித்து கவலை கொள்ளாமல் தன்னை அர்ப்பணித்தவர்.

கூலித் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, **பணத்தை விரையம் செய்யாமல்,** முடிந்தவரை தனது சக்திக்கு உட்பட்டும், உட்படாமலும் பல வேலைகளை தானே சுமந்துகொண்டு மிகவும் கடுமையாக உழைத்தவர்.

அவரிடம் எப்பொழுதும் சாதகமான சிந்தனைகள் (Positive Thinking ) குடியிருப்பதனால் எந்த வேலைகளையும் செய்யமுடியாது, தெரியாது என்று பாதகமாக சொல்லாமல் எடுத்த பணியை **துணிச்சலுடனும் மனமகிழ்ச்சியுடனும்** செவ்வனே செய்து முடிக்கும் திறமையுள்ளவர்.

அவருடைய உழைப்பும் தீர்க்கதரிசன சிந்தனைகளும் அர்ப்பணிப்பு மிக்க செயல்பாடுகளினாலும்தான், இந்த மெல்பன் ரொக்பேங்கில் எழுந்தருளியிருக்கும் **குன்றத்து குமரன் ஆலயம்**. எந்தவொரு கடனும் இல்லாமல் இயங்கி வருவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இதுவரை காலத்திலும் இந்த நாட்டில் எந்த ஒரு பொதுக்கோயிலும் இவ்வாறு கடனில்லாமல் ஸ்தாபிக்கப்படவில்லை என்பது ஒரு முக்கிய செய்தியாகும். அத்துடன் வேறு சில நாடுகளிலும் இதன் திருவுருவப்பெயரைப்பொறித்து வைத்திருப்பது முன்மாதிரியான ஆலய திருப்பணியாகும்.

எவ்வித சுய எதிர்பார்புகளின்றியும், தியாக சிந்தையுடனும் இந்த ஆலயத்தை உருவாக்கிய இராஜரட்ணம் வைத்தியநாதனின் (ரஞ்சன்) பெயரும் புகழும் விக்ரோரியா மாநிலத்தில் வசிக்கும் சைவசமய மக்கள் மனதில் மாத்திரமின்றி அவுஸ்திரேலியா கண்டம் வாழ் சைவசமய பக்தர்கள் மனதிலும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இவருடைய இந்த புனிதமான சேவையை மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

---0---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gnanam Art Creation - Mob: 0409 826 521